**O.S.No. 33/2022 நாள் 27.01.2026 PW 2 – திரு. ராமர்.**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை(8, 9 பிரதிவாதிகள்தரப்பில்)

நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1984 ஆம் ஆண்டு. இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கில் இறந்துபோன 7 வது பிரதிவாதி சந்திரபுஷ்பம் எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை. பிராதில் வாதிகள் சந்திரபுஷ்பம் எனது உறவினர் என்று தாக்கல் செய்துள்ளநிலையில் அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாராயணநாடாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 பெண், ஒரு ஆண் வாரிசு. 6 வது பிரதிவாதி கிருஷ்ணவடிவு எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு அக்கா முறை. என்னவகையில் அக்கா என்றால் எனது அக்காவை அவர்களை திருமணம் செய்து கொடுத்த அகரம் கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளதால் அக்கா உறவு. கடற்கரையாண்டி நாடாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ராமலெட்சுமி, மல்லிகா, கிருஷ்ணவடிவு, நாராயணன். வழக்கு தபசில் சொத்துக்களை நான் பார்த்துள்ளேனா, எங்கு உள்ளது என்றால் விவசாயம் செய்வதாக சொல்வார்கள், நான் பார்த்ததில்லை. 7 முதல் 9 பிரதிவாதிகளை என்ன காரணத்திற்காக வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள் என்றால் தெரியாது. வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதில் 4 வது பாராவில் 7 ம் பிரதிவாதி தபசில் சொத்துக்களை பொறுத்து இடைஞ்சல் செய்வதாக கூறப்பட்டுள்ள நிலையில் அது பற்றி தெரியுமா என்றால் இடைஞ்சல் செய்வதாக சொல்லியுள்ளார்கள். 7 ம் பிரதிவாதி தபசில் சொத்துக்களை பொறுத்து இடைஞ்சல் செய்வதாக சொன்னதை நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதிகள் இருவருக்கும் எப்போது திருமணம் நடந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1989 ஆம் ஆண்டு வாதிகள் வழக்கு சொத்துக்களை பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கும், 6 ம் பிரதிவாதிக்கும் வாய்மொழியாக பாகவிடுதலை கொடுத்துவிட்டார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாய்மொழி பாக விடுதலையை பயன்படுத்தி 7 ம் பிரதிவாதிக்கு, 6 ம் பிரதிவாதியும் நாராயணன் நாடாரும் சேர்ந்து கிரையம் முடித்துவிட்டார்கள் என்றுசொன்னால் அது பற்றி தெரியாது. 7 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தபின்பு 7 ம் பிரதிவாதி தங்கபுஷ்பம் என்பவருக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

BREETHA M Digitally signed by BREETHA M Date: 2026.01.27 18:52:55 +0530

பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்த பின்னர் தங்கபுஷ்பம் என்பவர் டேவிட் ரத்தினராஜா என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி தெரியாது. டேவிட் ரத்தினராஜா பல்வேறு நபர்களுக்கு சொத்துக்களை பொறுத்து கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றுசொன்னால் அது பற்றி தெரியாது. இந்த விவரங்கள் எதையும் சொல்லாமல் வாதிகள் மறைத்து சாட்சியம் சொல்ல அழைத்து வந்துள்ளார்கள் என்றால் மேற்படி விவரம் பற்றி சொல்லவில்லை. மேற்படி விவரம் பற்றி என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பிராது தபசில் சொத்தை சென்று பார்த்ததில்லை என்று சொன்னால் விவசாயம் செய்வதாக சொன்னார்கள், நான் பார்த்ததில்லை. தற்சமயம் பிராது தபசில் சொத்துக்கள் எல்லாம் சார்பதிவாளர் அவர்களால் குடியிருப்பு மனைகளாக மாற்றம் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கொடிமாடன் என்பவர் யார் என்றால் மல்லிகா என்பவரின் கணவர் ஆவார். வழக்கு தபசில் சொத்தில் 5 அயிட்ட சொத்துக்களும் ஒரே ஏரியாவில் உள்ளதா அல்லது வேறு வேறு பகுதிகளில் உள்ளதா என்றால் வேறு வேறு பகுதிகளில் உள்ளது, எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களின் மதிப்பு கோடிக்கணக்கில் இருக்குமா என்றால் அது பற்றி தெரியாது. பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள வழக்கில் 7 முதல் 9 பிரதிவாதிகள் அவசியமில்லாமல் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. பிராதில் சொல்லியுள்ள எல்லா சம்பவங்களும் நான் பிறந்து 4,5 வருடங்களுக்குள் நடந்த சம்பவம் என்றும், வாதிகள் சொல்லிக்கொடுத்தப்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் வாதிகள் சொல்லி எனக்கு தெரியும். எல்லா சம்பவமும் வாதிகள் சொல்லி நான் சாட்சியம் சொல்வதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றுசொன்னால் சரியல்ல. வாதிகள் கேட்டுக்கொண்டபடி நான் பொய் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றுசொன்னால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றுசொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.27 18:53:01 +0530